




## சென்னையில் வடக்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகளுக்குப் பாராட்டு:

# கழகத் தலைவர் அனுமதியுடன் விரைவில் அறிவிப்பு வெளியாகும்! ஜனவரியில் தெற்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு!

## சென்னை விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, டிச.24–**

**சென்னையில் தி.மு.கழக இளைஞர் அணி மாவட்ட மாநகர மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது, அவர் வடக்கு மண்டல மாநாட்டை சிறப்பாக நடத்தி வெற்றி பெறச் செய்த இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவருக்கும் நினைவுப் பரிசு வழங்கி எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**அப்போது அவர், "கழகத் தலைவர் அவர்கள் திருவண்ணாமலை சந்திப்பின் வெற்றியைப் பார்த்துவிட்டு, விரைவில் தெற்கு மண்டலத்திலும் இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நடைபெறும் என்று அறிவித்திருக்கிறார். அநேகமாக ஜனவரி இறுதியில் அந்தச் சந்திப்பு இருக்க வாய்ப்பு உள்ளது. அதற்கு இப்பொழுதே நாம் தயாராக வேண்டும்" என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:**

முதலில் எங்களுடைய அழைப்பை ஏற்று வந்திருக்கக்கூடிய அனைத்து அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### வடக்கு மண்டல நிர்வாகிகள்

கடந்த 14-ஆம் தேதி திருவண்ணாமலையில் நடந்த இளைஞர் அணியின் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பின் வாயிலாக, மிகப் பெரிய ஒரு வெற்றியை நாம் அடைந்திருக்கிறோம். இது நிர்வாகிகள் சந்திப்பாக இருந்தாலும், அன்றிலிருந்து இன்று வரைக்கும் ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் அதைப் பற்றிப் பேசும் அளவுக்கு, அதைத் திரும்பிப் பார்க்கும் அளவுக்கு, அதைப் பார்த்து வியக்கும் அளவுக்கு வெற்றிகரமாக நடத்திக் காட்டியிருக்கிறோம்.

நாம் வெறும் நிர்வாகிகள் சந்திப்புதான் நடத்தினோம். ஆனால், கிட்டத்தட்ட இளைஞர் அணி மாநாடு நடத்தியது போல பலர் கலங்கிப் போயிருக்கிறார்கள். ஒரு நிர்வாகிகள் சந்திப்பையே ஒரு மாநாடு போல இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறோம் என்றால், அது நம் தி.மு.க இளைஞர் அணியால் மட்டும்தான் சாத்தியம் என்பதை நாம் மீண்டும் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம்.

### நன்றி சொல்ல வேண்டும்

அன்று இரவே அனைத்து மாவட்ட அமைப்பாளர்களுக்கும், மாநாடு முடிந்த அடுத்த ஒரு மணி நேரத்துக்குள்ளேயே தொலைபேசியில் தொடர்பு கொண்டு உங்களுக்கு நன்றி சொல்லி, "வந்தவர்கள் அனைவரும் பாதுகாப்பாக பேருந்தில் ஏறிவிட்டார்களா? அவர்களுக்கெல்லாம் உணவு வழங்கப்பட்டுவிட்டதா?" என்றும், முக்கியமாக எத்தனை பேர் உங்களுடைய மாவட்டத்திலிருந்து வந்திருந்தார்கள் என்றும் கிட்டத்தட்ட அத்தனை பேரிடமும் நானே அன்றே பேசிவிட்டேன். இருந்தாலும், உங்களையெல்லாம் நேரில் அழைத்து ஒரு முறை நன்றி சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

உண்மையாகவே நன்றி சொல்வதற்கு வார்த்தைகள் தெரியாமல், வார்த்தைகள் போதாமல் இன்றைக்கு இந்த மேடையில் உங்கள் முன்பு நான் அமர்ந்திருக்கிறேன். இந்த நிகழ்ச்சி நேற்று முன்தினமே நடந்திருக்க வேண்டிய நிகழ்ச்சி. நேற்று முன்தினம் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தை, தலைவர் அவர்கள் கூட்டிய காரணத்தால், இரண்டு நாள்களுக்குப் பிறகு, இன்றைக்கு இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த நிர்வாகிகள் சந்திப்பு, வெற்றிக்கு உழைத்த உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என் மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### முரசொலியில் தினமும் அறிவிப்பு

தலைவரிடம் அனுமதி வாங்கி மண்டல நிர்வாகிகள் சந்திப்பு என்று அறிவித்துவிட்டோம். தலைவர் வருவதாக ஒப்புக்கொண்டார், பேசுவதற்கும் ஒப்புக்கொண்டார். ஆனால், எப்படி நடத்தப்போகிறோம்? தலைவர் அவர்கள் இளைஞர் அணி மாநாடு நடத்தியிருக்கிறார், இது நிர்வாகிகள் சந்திப்பு, இது மிகுந்த எழுச்சியோடு இருக்க வேண்டும். முரசொலியில் தினமும் அறிவிப்பு வந்துவிட்டது. தலைவரே என்னிடம் தொலைபேசியில் இரண்டு மூன்று முறை தொடர்புகொண்டு, 'என்ன முரசொலியில் தினமும் அறிவிப்பு வந்துகொண்டே இருக்கிறது?' என்று கேட்கும்போது நான் பெருமையாகச் சொன்னேன், 'ஆம், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு ஒன்றியத்திலும் பகுதி மற்றும் வாக்குச்சாவடி வரை நிர்வாகிகள் நியமித்துக் கொண்டிருக்கிறோம், அதற்கான அறிவிப்பு, முரசொலியில் வந்துதான் ஆக வேண்டும்' என்று தலைவரிடம் அனுமதி வாங்கிப் போட்டுக் கொண்டிருக்கிறோம். எனவே, இந்த அறிவிப்பு வந்தவுடன் இங்கே வந்திருக்கக்கூடிய அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நீங்கள் அத்தனைபேரும் அவ்வளவு சுறுசுறுப்புடன் தேனீக்கள் போல வேலை




செய்தீர்கள்.

### 29 கழக மாவட்டங்கள்

மிகக் குறுகிய காலம்தான் நமக்குக் கிடைத்தது. 25 நாள்கள்தான் நம்முடைய கைகளில் இருந்தன. இருந்தாலும், இவ்வளவு பெரிய ஒரு வெற்றியை இரவு பகல் பாராமல் உழைத்த உங்கள் அத்தனை பேருக்கும் சமர்ப்பிக்கிறேன். இந்த வெற்றி முழுவதுமே உங்களால் மட்டுமே சாத்தியமானது. குறிப்பாக, வடக்கு மண்டலத்துக்கு உட்பட்ட 29 கழக மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் செய்த பணி நிச்சயமாகத் தலைவர் அவர்களால் போற்றப்படக்கூடியது, பாராட்டப்படக்கூடியது. ஆனால், இதற்கு வெறும் வடக்கு மண்டல அமைப்பாளர்கள் மட்டும்தான் காரணமா என்று பார்த்தால், நிச்சயமாகக் கிடையாது. மற்ற மண்டலத்தில் இருப்பவர்களும் வடக்கு மண்டலத்திற்கு நாங்கள் சளைத்தவர்கள் இல்லை என்று அந்தப் பணியில் ஈடுபட்டீர்கள்.

வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு என்றாலும், தங்களுடைய மண்டலத்தில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்தால், எவ்வளவு ஈடுபாட்டுடன் செய்வீர்களோ, அதே அளவு ஈடுபாட்டுடன் இந்தப் பணிகளில் இங்கே வந்திருக்கக்கூடிய அனைத்து அமைப்பாளர்களும் துணை அமைப்பாளர்களும் உங்களை இந்தப் பணியில் ஈடுபடுத்திக்கொண்டீர்கள்.

### நமக்கே முதல் முறை.

25 நாட்கள் தூங்காமல் நாம் ஒவ்வொருவரும் களத்தில் இறங்கி வேலை செய்ததன் விளைவுதான் திருவண்ணாமலையில் 14-ஆம் தேதி அவ்வளவு பெரிய எழுச்சியான கூட்டத்தை நம்மால் கூட்ட முடிந்தது.

பொதுவாக மாநாடு நடத்துவது வேறு. ஆனால், நிர்வாகிகள் சந்திப்பு நடத்துவது நமக்கே முதல் முறை. அந்தச் சந்திப்பைப் பிரமாண்டமாக எப்படி நடத்துவது என்பதற்கு நம்மோடு உடன் நின்று நமக்கு வழிகாட்டியவர் நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் எ.வ.வேலு அவர்கள். அவருக்கும் இந்த நேரத்தில் நம் அனைவரின் சார்பாகவும் பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்வோம்.

இன்றைக்கு தி.மு.க இளைஞர் அணி இவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டு இந்த நிர்வாகிகள் சந்திப்பை நடத்திக் காட்டியிருக்கிறோம். இளைஞர் அணியில் இந்தப் பணி மட்டுமா? பல்வேறு பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். இங்கே பேசிய மாவட்ட அமைப்பாளர்கள், துணைச் செயலாளர்கள் எல்லாம் சொன்னார்கள், பல்வேறு பணிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்று.

எந்த இயக்கத்திலும், எந்த இளைஞர் அணியும் இவ்வளவு வேலைகள் செய்திருக்க முடியாது, அதற்கு வாய்ப்பே கிடையாது. பயிற்சிப் பாசறைக் கூட்டம் நடத்தச் சொன்னார் தலைவர், ஒவ்வொரு தொகுதிக்கும் நம்முடைய இளைஞர் அணி செய்து காட்டியது. அதன்பிறகு சிறந்த இளம் பேச்சாளர்கள் 100 பேரைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஒவ்வொரு கல்லூரியாக ஏறி இறங்கி, தமிழ்நாடு முழுவதும் பேச்சுப்போட்டி நடத்தி, இன்றைக்கு 200 சிறந்த இளம் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்துத் தலைமைக்குக் கொடுத்திருக்கிறோம்.

கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் திறக்க வேண்டும் என்று தலைவர் உத்தரவிட்டார்கள். இன்றைக்கு கிட்டத்தட்ட 234 தொகுதிகளில் 120 தொகுதிகளுக்கு மேல் நம்முடைய இளைஞர் அணி நூலகத்தைத் திறந்திருக்கிறோம், அதையும் இன்றைக்கு முறையாகப் பராமரிக்கிறோம். இப்படிப் பல்வேறு பணிகள். இந்தப் பணிகளுக்கு நடுவே இந்த நிர்வாகிகள் சந்திப்பு. இந்த நிர்வாகிகள் ஒவ்வொருவரும் எப்படி நியமிக்கப்பட்டார்கள் என்பது இங்கே வந்திருக்கக் கூடிய உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். உங்களுடைய தனிப்பட்ட அனுபவத்தில் உங்களுக்குத் தெரியும்.

மாவட்டச் செயலாளரிடம் பரிந்துரை வாங்கினாலும், ஒன்றியச் செயலாளரிடம் பரிந்துரை வாங்கினாலும், நம்முடைய துணைச் செயலாளர்கள் ஒவ்வொரு மண்டலப் பொறுப்பையும் ஏற்றுப் பயணம் செய்து, நேர்காணல் நடத்தி, உங்களுடைய கருத்துகளையும் பெற்று, முழுக்க முழுக்கத் தகுதியின் அடிப்படையில்தான் ஒவ்வொரு நிர்வாகியும் தேர்வு செய்யப்பட்டு முரசொலியில் அறிவிப்பு வந்தது. அப்படிச் செய்ததால்தான் இன்றைக்கு 90 சதவிகித நிர்வாகிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, உண்மையான இளைஞர்கள் தி.மு.க பக்கம்தான் இருக்கிறார்கள் என்பதை நாம் மீண்டும் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம்.

### இளைஞர் அணிக்கு நிகர் யாருமில்லை

இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எடுத்துக்கொண்டால், 'இளைஞர் அணி' என்று ஒன்று இருக்கிறதா என்பதே மிகப் பெரிய சந்தேகம்தான். ஆனால், இன்றைக்கு நம்முடைய தி.மு.க இளைஞர் அணி, இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து இயக்கங்களுக்கும் ஒரு வழிகாட்டியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இன்றைக்குப் பல கட்சிகள் பூத் கமிட்டியில் நிர்வாகிகள் நியமிப்பதற்குச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் போது, நாம் இளைஞர் அணி சார்பாக ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் நிர்வாகிகளை நியமித்திருக்கிறோம். அப்படித்தான் கிட்டத்தட்ட 5 லட்சம் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதில் ஒரு சிறிய உதாரணமாகத்தான் இன்றைக்கு இந்த வட மண்டல நிர்வாகிகள் சந்திப்பை நடத்திக் காட்டியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, நம்முடைய இளைஞர் அணி நிர்வாகிகள் ராணுவக் கட்டுப்பாட்டோடு அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். ராணுவம் என்று ஏன் சொல்கிறேன் என்றால், வெறும் பலத்தில் மட்டுமல்ல, கட்டுப்பாட்டிலும் நம்முடைய இளைஞர் அணிக்கு நிகர் யாருமில்லை என்பதை நாம் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம்.

சந்திப்பு நடப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு வரை நானும், மாவட்டச் செயலாளர் அண்ணன் வேலு அவர்களும், நம்முடைய மாநிலத் துணைச் செயலாளர்களும் ஒருவிதப் பதற்றத்துடனேயே இருந்தோம். எல்லா நிர்வாகிகளும் சரியாக வந்துவிடுவார்களா, சொன்ன அளவுக்கு வருகைப் பதிவு இருக்குமா, எல்லாருக்கும் சீருடை போய் சேர்ந்துவிட்டதா, எல்லாரும் பாதுகாப்பாக வந்து சேர்வார்களா என்ற பதற்றம் இருந்தது.

ஆனால், ராணுவக் கட்டுப்பாடு என்று சொல்வார்களே, அந்தத் ஒழுக்கத்தோடு வந்து கலந்து கொண்டு, ஒரு சிறிய தவறான விஷயம்கூட நடக்கவில்லை என்று நிரூபித்துக் காட்டியிருக்கிறோம். யாரும் மின்மாற்றி மீதோ, மின் கம்பத்தின் மீதோ, மரங்கள் மீதோ ஏறவில்லை. நாற்காலிகளுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. எந்தவித அசம்பாவிதமும் நடக்காமல் கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் கலந்து கொண்ட அந்தச் சந்திப்பைச் சிறப்பாக நடத்திக் காட்டியிருக்கிறோம்.

### அறிவுத் திருவிழா

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காக்கின்றவர்களாக நம் இளைஞர் அணி தம்பிமார்களாகிய நீங்கள் அதைச் செய்து காட்டியிருக்கிறீர்கள். கழகம் 75 ஆண்டுகளைக் கடந்ததையொட்டி நம்முடைய இளைஞர் அணி சார்பாக அறிவுத் திருவிழாவைச் சென்ற மாதம் சென்னையில் கொண்டாடினோம். 75 ஆண்டுகளைக் கடந்த நம்முடைய கழகம் இன்றைக்கும் அதே இளமையோடும் துடிப்போடும் இருக்கிறது என்பதை மீண்டும் நாம் நிரூபித்துள்ளோம். இளமையும் துடிப்பும் மட்டுமல்ல, கொண்ட கொள்கையில் உறுதியாக இருக்கிறோம் என்பதையும் இந்த நிர்வாகிகள் சந்திப்பு மெய்ப்பித்துள்ளது.

இதையெல்லாம் பார்த்துத்தான் இன்றைக்கு அடிமைக் கூட்டமும், சங்கிக் கூட்டமும் பயந்து கிடக்கிறார்கள். பா.ஜ.க-வைச் சேர்ந்த ஒரு தலைவர் நேற்று தொலைக்காட்சிக்குப் பேட்டி கொடுத்திருக்கிறார். முதலமைச்சருக்கு ஒரு வேண்டுகோள் வைக்கிறார், "உங்களுடைய மகனை அடக்கி வையுங்கள், மிக அதிகமாகப் போகிறார்" என்று. நம்முடைய கழகத் தலைவரைப் பார்த்து பா.ஜ.க அப்படிச் சொல்கிறது என்றால், நாம் அனைவரும் சரியான பாதையில் சென்றுகொண்டிருக்கிறோம் என்றுதான் பொருள். அதை நாம் ஒரு விமர்சனமாக எடுத்துக்கொள்ளக் கூடாது, நமக்குக் கிடைக்கக்கூடிய ஒரு பாராட்டாக, உந்துதல் சக்தியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், எப்படி இந்த நிர்வாகிகள் சந்திப்பு வெற்றிக்கு நீங்கள் ஒவ்வொரு ஊருக்கும் சென்று அங்கிருக்கக் கூடிய கிளைக் கழக, பாக அளவிலான இளைஞர் அணி நிர்வாகிகளைச் சந்தித்து நேரில் அழைப்பு விடுத்தீர்களோ, அதேபோலத் தொடர்ந்து செயல்பட வேண்டும். இளைஞர் அணி சந்திப்பை உங்களுடைய வீட்டு நிகழ்ச்சி போலக் கருதித்தான் நீங்கள் அந்தப் பணிகளில் ஈடுபட்டீர்கள். அதனால்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எப்பொழுதுமே பெருமையாக 'உடன்பிறப்புகள்' என்று பாசமாகச் சொல்வார். அந்த உரிமையோடு நாம் பணி செய்தோம். ஒரு மிகப்பெரிய பணியை முடித்துவிட்டோம், இனி ஓய்வு எடுக்கலாம் என்று யாரும் இருந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சந்திப்பு.

ஒவ்வொரு ஊருக்கும், கிளைக்கும், பாகத்திற்கும் சென்று உங்கள் நிர்வாகிகளைத் தொடர்ந்து சந்தித்து, அவர்களுடன் தொடர்பில் இருக்க வேண்டும். கழகத்தின் செய்திகளையும், தலைவருடைய அறிக்கைகளையும் அவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். சமூக ஊடகங்களில் புதிதாக நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் சுறுசுறுப்பாக இருக்க அவர்களை நீங்கள் ஊக்குவிக்க வேண்டும்.

### அடையாள அட்டைகள்

முரசொலியில் நாம் நியமித்து வரும் இளைஞர் அணி நிர்வாகிகளின் பெயர்கள் மின்னணு இதழ் மூலமாக வெளிவந்து கொண்டிருக்கிறது. அதை அவர்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும். முரசொலியில் பெயர் வரும்போது அதை அவர்கள் ஒரு பெருமையாக நினைப்பார்கள். புதிய நிர்வாகிகள் எல்லாம் நம் கழகப் பணியில் இணைந்து கொள்ளுங்கள்.

கழகத் தலைவர் அவர்கள் திருவண்ணாமலை சந்திப்பின் வெற்றியைப் பார்த்துவிட்டு, விரைவில் தெற்கு மண்டலத்திலும் இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நடைபெறும் என்று அறிவித்திருக்கிறார். அநேகமாக ஜனவரி இறுதியில் அந்தச் சந்திப்பு இருக்க வாய்ப்பு உள்ளது. அதற்கு இப்பொழுதே நாம் தயாராக வேண்டும். அதேபோல் புதிதாக நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் அத்தனை பேருக்கும் அடையாள அட்டைகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. அவை வந்ததும் சரிபார்க்கப்பட்டு உங்களிடம் ஒப்படைக்கப்படும். அந்த அடையாள அட்டைகளை அவர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகளுக்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

### உங்களுக்காக குரல்

தேர்தலுக்கு இன்னும் சரியாக 100 நாட்கள்தான் இருக்கின்றன. 2026 சட்டமன்றத் தேர்தலை நம்முடைய தலைவர் தலைமையில், சந்திக்க இருக்கிறோம். எனவே தேர்தல் பணிகளுக்கு நீங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். உங்களின் பணிகளை தலைவர் கவனித்து வருகிறார். நீங்கள் உழைக்க தயாராக இருந்தால், உங்களை உயர்த்துவதற்கு நம் தலைவர் அவர்களும் தயாராக இருக்கிறார். நானும் நிச்சயமாக உங்களுக்காக குரல் கொடுப்பேன். உங்களுடைய உழைப்பு நிச்சயம் வீண் போகாது. உங்களுக்கான அங்கீகாரத்தைச் சரியான நேரத்தில் போராடியாவது பெற்றுத் தருவேன் என்ற வாக்குறுதியை அளிக்கின்றேன். உற்சாகமாக உங்களின் பணிகளை வடிவமைத்துக் கொள்ளுங்கள்.

அதேபோலத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பயணம் மேற்கொள்ள இருக்கிறது. உங்கள் பகுதியில் உள்ள தேவைகள், தேர்தல் அறிக்கையில் என்னென்ன வாக்குறுதிகள் இடம்பெறலாம் என்பது குறித்து, அக்குழுவிடம் நீங்கள் தெரிவிக்க வேண்டும். 2021 தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளில் 99 சதவிகிதத்தை நாம் நிறைவேற்றியிருக்கிறோம். அந்த நம்பிக்கையில்தான் மீண்டும் மக்களைச் சந்திக்கப் போகிறோம்.

### அடுத்தடுத்த சந்திப்புகள்

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 98 லட்சம் வாக்காளர்களை நீக்கி இருக்கிறார்கள். எனவே உங்கள் பகுதியில் உள்ள நிலவரத்தைக் கள ஆய்வு செய்ய வேண்டும். விடுபட்டுப் போன வாக்காளர்களை மீண்டும் பட்டியலில் சேர்ப்பதற்கான வேலைகளில் நீங்கள் ஈடுபடுங்கள். திருவண்ணாமலை சந்திப்பில் கிடைத்த அனுபவங்களை அடுத்தடுத்த சந்திப்புகளுக்கு நாம் பயன்படுத்துவோம். உங்களுக்குள் அந்த அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவேண்டும். அடுத்து நடக்கின்ற நிர்வாகிகள் சந்திப்பை, திருவண்ணாமலையை விட மிகப்பெரிய எழுச்சியோடு நாம் நடத்தி காட்ட வேண்டும். அதற்கு இங்கு வந்துள்ள உங்கள் ஒவ்வொருவரின் உழைப்பும் சக உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பும், மிகமிக முக்கியம். அதற்கு நீங்கள் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாம் இவ்வளவு பணிகளை மேற்கொள்வது, நம்முடைய தமிழ்நாட்டைப் பாதுகாப்பதற்காகத்தான் என்பதை, உங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். தமிழ்நாட்டை எப்படியாவது பிடித்துவிட வேண்டும் என்று பாசிசக் கூட்டமும், அடிமைக் கூட்டமும் சூழ்ச்சி செய்கின்றன. தமிழ்நாட்டின் உரிமைகளைக் காக்கும் வலிமை நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், நம் தலைவருக்கும் மட்டும்தான் உண்டு. எனவே 2026 சட்டமன்றத் தேர்தலில் குறைந்தது 200 தொகுதிகளில் நாம் வெற்றி பெற வேண்டும். அதற்கு இளைஞர் அணி நிர்வாகிகளின் பங்களிப்பு மிக அவசியம்.

2021 சட்டமன்ற தேர்தல், 2024 நாடாளுமன்ற தேர்தல் வெற்றிக்கு இளைஞர் அணியின் பங்கு மிக மிக முக்கியமாக இருந்தது. அதைவிட அதிகமான உழைப்பும், எழுச்சியும், உங்களின் பங்களிப்பும் வருகின்ற சட்டமன்றத் தேர்தலுக்கு தேவைப்படுகிறது. எனவே அதற்கு ஏற்றதுபோல் உங்களின் பணிகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநாட்டில் கழகத் தலைவருக்கும், பொதுச் செயலாளருக்கும் வேண்டுகோள் வைத்தேன். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் இளைஞர்களுக்கு நீங்கள் அதிக வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். நிச்சயம் அதை செய்து காட்டுவேன்.

அடுத்தடுத்த மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நடக்கும்போது, இதேபோல் கூட்டங்கள் நடைபெற்று அந்தக் கூட்டங்களில் அந்தந்த மண்டல நிர்வாகிகளைக் கௌரவிக்க இருக்கிறோம்.

இந்த வெற்றிக்கு உழைத்த இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் அன்பகம் பணியாளர்கள் அனைவருக்கும், குறிப்பாக அன்பகம் செந்தில் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் என் இனிய கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் எ.வ.வேலு, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ரகு, இளையராஜா, அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், பிரபு கஜேந்திரன், சீனிவாசன், ஜி.பி. ராஜா, ஆனந்த்குமார், நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரப்பன், எபினேசர், பிரபாகர் ராஜா, சம்பத், நரேஷ் குமார், அமைப்பாளர்கள் தாகப்பிள்ளை, யுவராஜ், கிரண், சிவகுரு, துணை அமைப்பாளர் கிருஷ்ணகுமார், துணை மேயர் ராஜாங்கம், மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அன்பகம் செந்தில் மற்றும் பணியாளர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.